# எழுதி வளர்ந்த இயக்கம்

**திராவிட இயக்கம், அதன் சிந்தனைகள், சாதனைகள் ஆகியவற்றைத் தாங்கி ஏராளமான புத்தகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றை எப்படித் தேர்வு செய்வது, எந்தப் புத்தகத்தைப் படிப்பது என்பதை அறிவுரைக்கிறது இந்தத் தொடர்...**

பேராசிரியர் சுப.வீரபாண்டியன்

27

## திசை தோறும் திராவிடம்!



கோ.ரகுபதி

திராவிட மொழி, திராவிட இனம், திராவிட நாடு, திராவிட மாடல் போன்ற சொல்லாடல்கள் வழக்கில் இருப்பவை. இப்போது புதிதாக ஒரு நூல் வெளி வந்திருக்கிறது. அந்த நூலின் பெயர், 'திராவிட மதம்'.

திராவிடத்துக்கு ஏது மதம்? அது மத மறுப்பு இயக்கமாயிற்றே என்று தோன்றலாம். உண்மைதான். ஆனால், இந்தப் புத்தகம் இப்படி ஒரு மதம் இருந்திருக்கலாம் என்னும் கருத்தை முன் வைக்கிறது.

இந்நூல் இப்போது எழுதப்பட்டதில்லை. 1914 - ஆம் ஆண்டு வெளிவந்திருக்கும் இந்த நூலை பேராசிரியர் கோ.ரகுபதி ஆவணக் காப்பகத்திலிருந்து எடுத்து, இப்போது பதிப்பித்திருக்கிறார்.

### தமிழ் மண்ணில் முதல் மதம்!

பாளையங்கோட்டையில், மூன்றாவது சைவ மஹா சங்கத்தில், சென்னை பண்டிதை ஸ்ரீமதி கா.அலர்மேன்மங்கை அம்மாள் அவர்களால் இந்நூல் வாசிக்கப் பெற்றதாக, நூலின் அட்டையில் ஒரு குறிப்பு உள்ளது. இதனைத் தவிர அந்த அம்மையாரைப் பற்றிய வேறு எந்த ஒரு குறிப்பும் கிடைக்கவில்லை என்று தொகுப்பாசிரியர் ரகுபதி எழுதுகின்றார்.

திராவிட மதமே, பௌத்தம், சமணம், வைதீகம் போன்ற அனைத்து மதங்களுக்கும் முன்னால் இந்த மண்ணில் இருந்த மதமாக இருந்திருக்கக் கூடும் என்றும், ஆரிய மதத்துக்கு எதிரானது '**திராவிட மதம்**' என்றும் அலர்மேன்மங்கை எழுதி இருக்கிறார். அதற்கான சில தர்க்க வாதங்களை அவர் முன் வைத்துள்ளார் என்றாலும், யூகத்தின் அடிப்படையிலேயே தான் எழுதுவதாகவும், நேர்மையோடு அவர் குறிப்பிட்டுள்ளார்.

### சமத்துவம் போதித்த மதம்


ஆரியர்கள் இங்கு வந்து குடியேறிய பிறகுதான் மதம் என்னும் சிந்தனை நமக்கு வந்திருக்கும் என்பதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. மதம் என்பது வாழ்க்கைநெறி பற்றியது என்றால், அந்தச் சிந்தனை தமிழர்களுக்கு எப்படி இல்லாமல் இருந்திருக்கும் என்று அவர் கேட்கிறார். மதம் என்னும் சொல்லை அவர் பயன்படுத்தினாலும், ஒரு கருத்தியல், ஒரு நெறி என்னும் சிந்தனைப் போக்கே அதில் பொதிந்து கிடப்பதை நம்மால் பார்க்க முடிகிறது.

திராவிட மதம் என்றால் என்ன என்பதற்கு, பண்டிதை அலர்மேன்மங்கையார் தரும் விளக்கம் வியக்கத்தக்கதாக உள்ளது. அவர் எழுதுகிறார், "(அதனை) மாசு மருவற்ற லௌகீகம் எனினும் பொருந்தும். சாதி சமய வர்க்க பேதங்களுக்கும், சண்டை சச்சரவுகளுக்கும் இடமின்றி, யாவரும் அபேதமாய்க் கூடி வாழக்கூடிய சமயம் எதுவோ, அதுவே திராவிடச் சமயம்".

இதனை விடத் திராவிட இயக்கக் கருத்தியலுக்குப் பொருந்தி வருகிற வேறு ஒரு கூற்று எதுவாக இருக்க முடியும்? லௌகீகம் என்பது பொருள், முதல் வாதம் தொடர்புடையது. சாதி, சமய வேறுபாடுகளோ, சண்டை சச்சரவுகளோ இன்றி, சமத்துவத்தோடு மக்கள் அனைவரும் கூடி வாழ வேண்டும் என்பது தானே திராவிட இயக்கத்தின் அடிப்படை நோக்கம்! அதைத்தான் மதம் என்னும் பெயரில் இந்த நூல் குறிக்கின்றது.

### மீண்டும் திராவிட மதம்?

இந்த நூல் வெளி வந்திருக்கும் அதே 1914 ஆம் ஆண்டு, மறைந்து போன அயோத்திதாசப் பண்டிதரும், 'திராவிடர்' என்னும் கருத்தை வலியுறுத்துகின்றார். அருட்தந்தை அலோசியஸ் அவர்கள் தொகுத்துள்ள 'அயோத்திதாசர் சிந்தனை' களில் இப்படி ஒரு கருத்து அழுத்தமாக இடம்பெற்றுள்ளது. தான் நடத்திய ஏட்டுத் 'தமிழன்' என்று பெயர் சூட்டி இருந்தாலும், 'திராவிடன்' என்னும் சொல்லையே பல இடங்களில் அவர் பயன்படுத்துகிறார். 1911- ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கு எடுக்கப்பட இருந்த நேரத்தில், அதற்கு ஓராண்டுக்கு முன்னால், அயோத்திதாசர் தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோளை முன் வைக்கிறார். தமிழர்கள் யாரும் தன்னை இந்து என்று குறிப்பிட்டுக் கொள்ளாமல், 'சாதியற்ற திராவிடர்' என்றே குறிப்பிட வேண்டும் என்கிறார்.




இந்த நூல் வெளிவந்திருக்கும் அதே காலகட்டத்தில்தான், டாக்டர் சி. நடேசனார் மற்றும் சில பெரியவர்களால் 'திராவிடர் சங்கம்' (1912) என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது என்பதையும் நாம் அறிவோம். 1916 - இல் 'நீதிக் கட்சி' என்று அறியப்படும் 'தென்னிந்திய நல உரிமைக் கழகம்' இந்த மண்ணில் கால் ஊன்றியது. எனவே இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம், திராவிட இயக்கச் சிந்தனைகளுக்குக் கால்கோள் நாட்டியுள்ளது என்பது புரிகிறது!

நூலாசிரியர், 'மீண்டும் தமிழர்கள் அனைவரும் திராவிட மதத்துக்குத் திரும்புங்கள்' என்று அழைப்பு விடுக்கிறார். மொழி, இனம், நிலம் என்று பல்வேறு பொருளைக் குறித்தும், இன்று மாடலாக உயர்ந்து நின்று புகழ் பரப்பியும் வருகின்ற திராவிடம், இந்த நூலில் மதம் என்று அழைக்கப்பட்டாலும், அடிப்படையில் அது ஒரு கருத்தியலே என்பது தெளிவாகிறது!

**சாதிகளுக்கும், பெண் அடிமைத்தனத்திற்கும் எதிரான, சனாதனத்தை வீழ்த்த வந்த, சமத்துவம் - சமூக நீதி ஆகியனவே திராவிடக் கருத்தியல் ஆகும்.**

சாதிகளுக்கும், பெண் அடிமைத்தனத்திற்கும் எதிரான, சனாதனத்தை வீழ்த்த வந்த, சமத்துவம் - சமூக நீதி ஆகியனவே திராவிடக் கருத்தியல் ஆகும்.

அந்தக் கருத்தியலை எந்தப் பெயரால் அழைத்தால் என்ன? திராவிடம் என்றால் சமத்துவம், திராவிடம் என்றால் சமூக நீதி! திசைதோறும் செழிக்கட்டும் திராவிடக் கருத்தியல்!

-வாசிப்போம்

## திராவிட இயக்க இதழ்கள் - அறிவு வழி



சென்னை மாவட்ட திராவிடர் கழகத்தில் நீண்ட காலம் பணியாற்றியவரும், 'பெரியார் சமதர்ம இயக்கம்' என்ற அமைப்பை நடத்தி வந்தவருமான 'செஞ்சட்டை' கே.பஞ்சாட்சரம் என்பவரால் நடத்தப்பட்டது 'அறிவு வழி' எனும் மாத இதழ். இதழுக்கு அவர்தான் ஆசிரியர். ஒரு விபத்தின் காரணமாக 1996- ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் தேதி அன்று காலமானார்.

இதழ் தொடங்கப்பட்ட காலம் சரியாகத் தெரியவில்லை. ஆனால் 'கீற்று' இணையதளத்தில் 2011- ஆம் ஆண்டு வெளியான 'ஆத்திகனும் நாத்திகனும்' என்ற கவிதை 1988- ஆம் ஆண்டு 'அறிவு வழி' இதழில் வெளியானது என்று ஆதாரமாகக் காட்டப்பட்டிருப்பதால். 80-களில் இருந்து இந்த இதழ் வெளிவரத் தொடங்கியிருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது.

தலித் பிரச்சினைகளைப் பேசிய முக்கியமான இதழ்களில் ஒன்றாக 'அறிவு வழி'யைக் குறிப்பிடலாம். 1999-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியான 'அறிவு வழி' இதழில் மொழிப்போர் தியாகி நடராசனின் வழி வந்த குடும்பத்தைப் பற்றிய பேட்டி இடம்பெற்றிருக்கிறது.

இதன் மூலம், பஞ்சாட்சரம் மறைந்த பிறகும் இந்த இதழ் சில காலத்துக்கு வெளிவந்திருப்பது தெரிகிறது.

1990- ஆம் ஆண்டு அம்பேத்கர் பிறப்பு நூற்றாண்டு தொடக்க விழாவையொட்டி வெளிவந்த 'அறிவு வழி' சிறப்பு மலர் மட்டும் தற்போது இணையத்தில் கிடைக்கிறது. அந்த மலரில் அம்பேத்கர் குறித்து, பெரியார், நெ.து.சுந்தரவடிவேலு, பெரியார்தாசன் போன்ற அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. தமிழ்நாட்டில் அம்பேத்கரை 'அம்பேத்கர்' என்று அழைத்து வந்த சூழலில் இந்த இதழ் அவரை 'அம்பேட்கர்' என்று மராத்தி மொழி உச்சரிப்பிலேயே குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

## :ப்ளாஷ்பேக்



### அதிகாலை பிரசாரம்!



சேகரன்

ஈரோடு மாவட்டம், வீரப்பன்சத்திரத்தில் 1984-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டம் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, அதிகாலை 5:30 மணிக்கு வருகை புரிந்த தலைவர் கலைஞர் அவர்கள், "சூரியன் உதிக்கின்ற நேரத்தில், உங்களிடம் உதயசூரியனுக்கு வாக்கு சேகரிக்க வருகை புரிந்துள்ளேன்" என்று உற்சாகமாகப் பேச்சைத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் ஆரவாரத்தில் கைதட்டி உற்சாகப்படுத்தினர். தலைவருடன் தயாளு அம்மாளும் மேடையில் இடம்பெற்றிருந்த அரிய தருணத்தில், பொதுக்கூட்ட ஏற்பாட்டாளராக நானும் இடம்பெற்றிருந்தது என்றைக்கும் மறக்க முடியா நிகழ்வு.

**-இரா.சேகரன், அவைத்தலைவர், ஈரோடு மாநகர தி.மு.க.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## வரலாற்று ஆவணம்!



தமிழ்நாட்டின் சமூக சமத்துவ வரலாற்றை, திராவிட இயக்கத்துக்கு முன் திராவிட இயக்கத்துக்குப் பின் எனப் பிரிக்கலாம். திராவிட இயக்கத்தின் உரிமைப் போராட்டம்தான் தமிழ்நாட்டின் இன்றைய வளர்ச்சிக்கு அடித்தளம்.

அந்த வரலாற்றை இளைய தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கும் முயற்சியாக, இளைஞர் அணி சார்பில், 'முரசொலி'யில் 'பாசறைப் பக்கம்' உருவானது. அந்தப் பக்கத்தில் வெளிவந்த 'திராவிடத்தால் வாழ்கிறோம்' ஓவிய வடிவில் வரலாறு தொகுக்கப்பட்டு நூலாக வந்துள்ளது.

சென்னையில் நடைபெற்ற இளைஞர் அணி புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்தில், நமது முதலமைச்சர் இந்த நூலை வெளியிட்டார். நூலின் முதல் பாகமாக, திராவிட இயக்க உரிமைப் போராட்டத்தில் பெரியாரின் வருகைக்கு முந்தைய காலகட்டம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இளைஞர் அணியின் பாசறைப் பணிகளில், வரலாற்று ஆவணமாகத் 'திராவிடத்தால் வாழ்கிறோம்' உருவாகியுள்ளது. கழகத்தின் பணிகளில் பாசறைப் பதிப்பகம் கல்வெட்டாக நிற்கும்.





## கருவூலம்

### உயிர் தப்பிய கலைஞர்!

**1967-ஆம் ஆண்டு தேர்தல். சென்னையில் வாக்குப்பதிவு. முதல் நாள் இரவு சென்னை முழுவதும் உள்ள கழகத் தேர்தல் பணிமனைகளுக்குச் சென்று, மறுநாள் வாக்குப் பதிவுக்குத் தேவையான ஏற்பாடுகளைப் பார்வையிட்டு வருகிறார் கலைஞர். அவரைப் பின் தொடர்ந்து வந்த சிலர், கோட்டூர்புரம் அருகே தாக்குதல் நடத்தத் தொடங்கினர். கலைஞரை ஒரு வீட்டுக்குள் அடைத்து அப்பகுதியைச் சேர்ந்த சாரங்கன் என்கிற தொண்டர் காப்பாற்றினார். பின்னர் அண்ணாவும், கலைஞரும் அவரை வீட்டுக்கு வரவழைத்து நன்றி பாராட்டினர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

196




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131